**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை - லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட்- –2019/2020**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் – லங்கா ஜேமொலொஜிக்கல் லெபோரட்ரி (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் 2019 ஏப்ரல் 01 முதல் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கான செயற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாகவும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் சேர்த்து விதிகளில் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்து சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டியதுடன் இதற்கு மேலதிகமாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் பின்னர் 06 மாதங்களினுள் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பொறுப்பான நபரால் உறுதிப்படுத்தப்படுவதை கம்பனிப் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

**2.1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.1.2 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **புத்தகங்கள் மற்றும் கணக்குகளைப் பேணிச்செல்லல்**<br>கம்பனியால் பேணப்பட வேண்டிய பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் 2014 ஏப்ரல் 01 முதல் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு கம்பனியால் பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ை) காசேடு<br>(ைை) பேரேட்டுக் கணக்குகள்<br>(ைைை) நாட்குறிப்புக்கள்<br>(ைஎ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்<br>(எ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 2.2.1 செலுத்த வேண்டிய மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையால் கம்பனியின் தலைவர் மற்றும் பணிப்பாளரின் சார்பில் தாய்லாந்து சுற்றுலாவிற்காக ரூபா 369,440 தொகையும், ஜேர்மனிக்கான சுற்றுலாவிற்காக ரூபா 1,032,887 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. ஏனினும் அந்த பணம் 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனியால் தீர்த்து | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதயை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வுத் திகதி வரையிலும் வருமான வரிக்காக பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் முறையே ரூபா 14,619,695 மற்றும் ரூபா 4,784,831 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வருமான வரிக்காக பதிவு செய்வதற்கும் வருமான வரி செலுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி 2008 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு கம்பனியின் முகாமைத்துவம் தவறியிருந்தது. | கம்பனியால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |